**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

## DW 5- OS. No. 250/2017 CW 470/2018

2023 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி கூடுதல் சார்பு நீதிபதி திருமதி.எம்.மேகலா மைதிலி பி.ஏ.பி.எல் முன்னிலையில் திருமதி.ரேகா கிரேடு 2 பேன்ச் கிலர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.மதன் குமார் | தொழில் : துணை மாநில வரி அலுவலர் |
| த/பெ. : திரு, சோமசுந்தரம் | வயது : 34 |
| முகவரி : | |

**பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் திருப்பூர் தெற்கு வரி விதிப்பு வட்டத்தில் துணை மாநில அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவும் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு இருந்தது. அழைப்பாணையில் Tin NO.33662324964 தொடர்பான பதிவுச்சான்றிதழ், விண்ணப்ப படிவம் இணைக்கப்பட்ட ஆவணங்கள் பங்கு தாரர் ஒப்பந்தம் ஆகியவை தாக்கல்செய்ய உத்தரவிடப்பட்டு இருந்தது. மேற்படி ஆவணங்கள் விசாரணைக்காக மத்திய குற்றப்பிரிவில் ஒப்படைக்கவிட்டபடியால் மேற்படி ஆவணங்களின் உண்மை நகல் மட்டுமே எங்களுடைய அலுவலகத்தில் உள்ளது. எனவே மேற்படி ஆவணங்களின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணங்கள் ஒருங்கிணைந்த Booklet **Ex.Y6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பில் மேற்படி ஆவணங்கள் நகல் என்பதால் ஆட்சேபிக்கப்பட்டு அசல் ஆவணங்கள் மத்திய குற்றப்பிரிவால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளபடியால் ஆட்சேபணை ஆனது நிராகரிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கான தொகுப்பில் 1.5.2009 தேதியிட்ட பதிவுச்சான்றிதழில் புகைப்படம் இல்லை. அதில் நிறுவனத்தின் பெயர் Bloom Knit Finishers என உள்ளது. அதன் முகவரி 15/8, KupannaChetiyar Street, Palladam Road, Coimbatore என உள்ளது. Form F ல் லோகநாதன் என்பவர் கையெழுத்து செய்துள்ளார். மேற்படி பதிவுச்சான்றிதழுடன்

கிரய ஆவணம் எண் 3120/2007 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் ஆர்.லோகநாதன் என்பவர் பெயரில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள தொகுப்பில் ரேனுகாதேவி மற்றும் கஸ்தூரி ஆகியோருக்கு இடையே 50 சதவீதம் பங்கானது இணைக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்பந்தம் இல்லை. பொதுவாக பங்குதாரர் ஒப்பந்தம் இல்லாமல் பதிவு எண் வழங்கப்படாது என்றால் உதவி ஆணையாளர் தான் அதனை முடிவு செய்து பதிவு செய்வார்.மேற்படி சமயத்தில் என்ன வழிமுறை பின்பற்றப்பட்டது என்பது குறிப்பாக தெரியவில்லை. மேற்படி தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் 1.9.2007 என காட்டப்பட்டுள்ளது. அதில் நிறுவனத்தின் பெயர் Bloom Knitt Finisher என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி குத்தகையானது கந்தசாமி என்பவருக்கும் Bloom Knit Finishers பங்குதாரர்கள் ரேனுகாதேவி ஆகியோருக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1.5.2009 தேதிய குத்தகை ஆவணத்தில் வி.எஸ்.கனேசன் மற்றும் சுப்பிரமணி சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். அதில் Bloom Knitt Finisher என உள்ளது. மேற்படி தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தின் No.30 கிழக்கு தெரு அக்கரகாரம் கோயம்பத்தூர் கிளை நிறுவனம் ஆரமிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. Form D 19.5.2009 ல் வழங்கப்பட்டுள்ளது அதில் புகைப்படம் இணைக்கப்படவில்லை. அதில் தொழில் முகவரி 15/8, KupannaChetiyar Street, Palladam Road, Coimbatore என உள்ளது. கூடுதல் முகவரி No.30 கிழக்கு தெரு அக்கரகாரம் கோயம்பத்தூர் என உள்ளது. Bloom Knitt Finisher மற்றும் Bloom Knit Finishers என்ற நிறுவனங்களுக்கு ஒரே டின் நெம்பரா வேறு வேறு டின் நெம்பரா என்பது தெரியவில்லை. மேற்படி தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள அதிஸ் கார்மெண்ட்ஸ் வழங்கிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள டின் நெம்பரானது அதிஸ் கார்மெண்ட்ஸ் உடையதா அல்லது Bloom Knit Finishers உடையதா என்பதை ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும்.

**குறுக்கு விசாரணை மனுஅனுமதியின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஓம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.